D.V.C 14/2022

PW-1 பெல்சியா C/o.அமலிகிரேசி

நாள் 12.06.2024

(R1 present. R2 to R7 appearance dispence with)

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1. எனது தரப்பு முதல் ஆவணமாக மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டது ம.சா.ஆ.3 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.4 ஆகவும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.5 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக இராமநாதபுரம் மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல்செய்து IDOP No.64/2020 மனு நகல் ம.சா.ஆ.6 ஆகவும், மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மீது எஸ்.பி.பட்டிணம் காவல் நிலையத்தில் அளித்த புகார்மனு நகல் ம.சா.ஆ.7 ஆகவும், மனுதாரர் அளித்த புகார்மனு சம்பந்தமாக எஸ்.பி.பட்டிணம் காவல் நிலையத்தில் கொடுத்த மனு ரசீது 1ம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டது ம.சா.ஆ.8 ஆகவும், மனுதார், 1ம் எதிர்மனுதாரருக்கு பணம் அனுப்பியதற்கான பேங்க் மஸ்கட் வங்கி மற்றும் சிட்டி யூனியன் பேங்க் தேவகோட்டை கிளை மற்றும் Modern Exchange company LLC ஆகியவைகளின் ஸ்டேட்மெண்ட் ம.சா.ஆ.9 ஆகவும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தாரல் எதிர் மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.10 ஆகவும், மனுதாரர்

நகைகளை 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் பெயரில் State bank of India, Thondi கிளையில் அடமானம் வைத்ததற்கான ரசீது நகல் ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கண்டுள்ள பரிகாரங்கள் வழங்க கோரப்படுகிறது.

எதிர் மனுதாரர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.